(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(2).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 பெப்ரவரி 22 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2024 மார்ச் 05, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடனும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகளுடனான கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு 2023 நவம்பர் 17 ஆம் திகதிய 2358/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ( 3 ) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் (பதிற்கடமை) விதிக்கப்பட்டு, 2023 செப்டெம்பர் 21 ஆம் திகதிய 2350/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சேர் பெறுமதி வரிச்சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் சேர் பெறுமதி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2023 டிசம்பர் 19 ஆம் திகதிய 2363/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் 4 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் காடு வேளாண்மை ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (ICRAF) இடையிலான புரவலர் நாட்டு உடன்படிக்கை IV, V, VI, IX, X, XI, XII, XIII, XIV, XV மற்றும் XVI இன் விதிமுறைகளைச் செயற்படுத்துவது தொடர்பான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2348/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2024 மார்ச் 06, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வங்கித்தொழில் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2024 மார்ச் 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி தேசிய மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகள் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அக் காரணத்தினால் மேற்படி மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகளில் அரைவாசிக்கு மேல் மருத்துவமனை இழந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அனுமதியின்றி குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்கள் தொடர்பாக இன்றளவில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனுமதியற்ற குடியிருப்பாளர்களை பிறிதொரு பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு இன்றளவில் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திட்டம் யாதென்பதையும்;

(vi) ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

42/2024

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்புறுபிட்டிய, மிரிஸ்வத்த வளவ்வயில் வசித்த சாரா லோரென்சினா விஜேசிங்ஹ அம்மையார் தனது பெற்றோரை நினைவு கூருமுகமாக மாத்தறை, ராஹுல வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்த குணதிலக்க ஞாபகார்த்த மண்டபம் உடைத்து அகற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மண்டபத்தை உடைத்து அகற்றுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அது உடைத்து அகற்றப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குணதிலக்க ஞாபகார்த்த மண்டபத்திற்குப் பதிலாக நிர்மாணிக்கப்படும் புதிய ஞாபகார்த்த மண்டபத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) புதிய ஞாபகார்த்த மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக கல்வியமைச்சினால் செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புதிய ஞாபகார்த்த மண்டபத்தின் நிர்மாணப் பணிகளில் இன்றளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு யாதென்பதையும்;

(ii) எஞ்சிய பகுதியினைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

310/2024

கௌரவ ஹேஷா விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் செயற்பாட்டிலுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அரசாங்கத்தில் பதிவு செய்யாது முன்பள்ளிகளை நடத்திச் செல்ல முடியுமா என்பதையும்;

(iv) முன்பள்ளிகளைக் கண்காணிப்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(v) முன்பள்ளியொன்றை நடத்திச் செல்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

355/2024

கௌரவ கெவிந்து குமாரதுங்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் நியமிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அத்திகதியிலும் 2024.01.31ஆந் திகதியிலும் நுகர்வு வகுதி ஒவ்வொன்றிலும் மின்சார அலகு ஒன்றுக்கென அறவிடப்பட்ட கட்டணமும், அக்கட்டண அதிகரிப்பும் சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலும் 2024.01.31ஆந் திகதியிலும்;

(ii) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து 2024.01.31ஆந் திகதி வரை சிவப்பு கட்டணப் பட்டியல் வழங்கப்பட்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட, மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011.01.01 ஆம் திகதியிலிருந்து 2020.12.31ஆந் திகதி வரை மின் இணைப்பை பெற்றுக்கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவற்றுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்தையும்;

(iii) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து 2024.01.31ஆந் திகதி வரை மின் இணைப்பை பெற்றுக்கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவற்றுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்தையும்;

(v) தற்போதைய அமைச்சரின் பதவிக் காலத்தில் மின் இணைப்பை பெற்றுக் கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர் களின் எண்ணிக்கை, வருடாந்த சராசரி பெறுமானமாக யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

356/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை, சிங்கள மொழி மூல, தமிழ் மொழி மூல மற்றும் சிங்கள, தமிழ் மொழி மூல அடிப்படையிலும்;

(ii) அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, 10 இற்குக் குறைந்த, 10-20 இடைப்பட்ட, 20-50 இடைப்பட்ட, 50-100 இடைப்பட்ட மற்றும் 100-200 இடைப்பட்ட எனும் வகைப்படுத்தலின் அடிப்படையிலும்;

(iii) அரசாங்கப் பாடசாலைகளுக்கு மத்தியில் க.பொ.த. உயர் தரத்திற்காக கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கையும்;

(iv) க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) பாடத்துறைகளை ஆங்கில மொழியில் கற்பிக்கும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கையும்;

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

366/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை 'அடையாளங் காணப்படாத' சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை வருட வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் பதிவாகின்ற மாவட்டங்களும் மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) சிறுநீரக நோயாளர்கள் பதிவாகின்ற இதர மாவட்டங்களும் அவ்வொவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறுநீரக நோயாளரொருவருக்கு அரசாங்கம் வழங்கும் மாதாந்த கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கொடுப்பனவுத் தொகையைப் பெறுகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

371/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கம், லஸாட் - பிரான்ஸ் கம்பனியிடம் (M/S Lazards-France) நிதி ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம் கிளிபர்ட் சான்ஸ் (M/S Clifford Chance LLP) கம்பனியிடம் சட்ட ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1242/2024

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களுக்கும் வேறு கடமைகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) தற்போது இலங்கை பொலிஸ் சேவையில் வெற்றிடங்கள் நிலவுமாயின், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி எண்ணிக்கையானது ஒவ்வொரு நபர்/நிறுவனத்திற்கு ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1282/2024

கௌரவ அசங்க நவரத்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) வன விலங்குகளின் செயற்பாடுகள் காரணமாக பயிர்ச் செய்கைகளுக்கு வருடாந்தம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சேதங்களைக் குறைப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1285/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவகத்தில் பணிபுரியும் இயன் மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயன் மருத்துவரின் பெயர் மற்றும் முகவரி தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி இயன் மருத்துவர்களின் கடமையின் தன்மை யாதென்பதையும்;

(iv) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(v) இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய பின்னடைவைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 மார்ச் 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

378/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதி யாது என்பதையும்;

(ii) 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மேற்படி கூட்டுத்தாபனத்தின் இலாபம்/ நட்டம் ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குமாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நட்டத்தை தவிர்த்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நிலுவைத் தொகைகளை செலுத்த வேண்டியுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் கிடைக்க வேண்டியுள்ள நிலுவைத் தொகை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி நிலுவைத் தொகைகளை அறவிட்டுக்கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

465/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு இலங்கையில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பாரியளவிலான வலுசக்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களின் மூலம் தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்களின் மூலம் மின் அலகு ஒன்றின் விலையில் ஏற்படுத்தப்படும் தாக்கம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

510/2024

கௌரவ ரோஹண பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அனுராதபுரம் மாவட்டத்தில் மூடப்பட்ட அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அப்பாடசாலைகளை மூடுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அப்பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அல்லது அப்பாடசாலை களுக்குரிய வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

540/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில், தற்போது திரைப்படங்கள் திரையிடப்படுகின்ற திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் திரையிடப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

563/2024

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேயர்கள் என்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(iii) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளுள் குறுகிய கால பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்,

(v) மேற்படி காணிகளை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் இதுவரை ஈட்டப்பட்டுள்ள வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

588/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி நிறுவனங்களில் பணியாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்களின் பராமரிப்பிற்காக அரசாங்கம் வருடாந்தம் செலவிடும் மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்கூறப்பட்ட சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் நிலவும் நகர பிதா, தவிசாளர் மற்றும் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு செலுத்தப்படுகின்ற மொத்த மாதாந்தக் கொடுப்பனவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) உள்ளூராட்சி மன்றங்களின் சகல உறுப்பினர்களுக்காகவும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மொத்தச் செலவு மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உட்பட அரசாங்க வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு தாம் பணியாற்றும் தொகுதியினைப் பிரதிநிதித்துவம் செய்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கிருந்த வாய்ப்பினை இல்லாமல் ஆக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தினை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

610/2024

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தண்டனைச் சட்டக்கோவைக்கு அமைய விதிக்கப்படக் கூடிய அதிகபட்ச தண்டனை மரண தண்டனை என்பதையும்;

(ii) தற்போது மரண தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மரண தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தேவையான கயிறு உட்பட ஏனைய சாதனங்கள் வழங்கப்பட்டு, தூக்குமேடை புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அலுகோசு பதவிக்கான ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு எதிராக தடைகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அத்தடைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

611/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய சனாதிபதி, சனாதிபதியாக பதவி ஏற்ற திகதி தொடக்கம் இதுவரை மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விஜயத்தின்போதும் சந்தித்த அரச தலைவர்கள் தனித்தனியே யாரென்பதையும்;

(iii) மேற்படி அரச தலைவர்களுடன் இராஜதந்திர ஒப்பந்தங்கள் எட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வொப்பந்தங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தின்போதும் சனாதிபதியுடன் கலந்துகொண்டுள்ள ஏனைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

636/2024

கௌரவ பீ.வை.ஜீ.ரத்னசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தலையீட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பப்பட்டுள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தலையீடின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆண்டில் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள மொத்த அந்நியச் செலாவணி எவ்வளவு என்பதையும்;

(v) எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையைச் சேர்ந்த பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1090/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைக் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) முறையாகப் பதிவு செய்யப்படாத குத்தகைக் கம்பனிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) குத்தகைக் கம்பனிகள் பல்வேறு வட்டி விகிதங்களை அறவிடுவதன் காரணமாக குறித்த கம்பனிகளுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள தரப்பினர்கள் பாரிய அசௌகரியத்திற்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி கம்பனிகள் அறவிடும் வட்டி வீதங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) குத்தகை வசதிகளைப் பெற்றுக்கொண்டுள்ள வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2024 மார்ச் 21, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு வருடமும் அதிக வறட்சியான காலநிலை நிலவும் காலப்பகுதிகளில் கண்டி, பன்வில மற்றும் உடுதும்பரை பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசங்கள் உட்பட மத்திய மலைநாட்டின் பல பிரதேசங்களிலுள்ள ஒதுக்குக் காடுகளையும் நீரேந்துப் பிரதேசங்களையும் சார்ந்த காடுகளும் சிறிய பற்றைக் காடுகளும் தீ வைக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அதன் காரணமாக நீர் ஊற்றுக்கள் வற்றிப்போதல், மழை காலங்களில் மலை உச்சிகளிலுள்ள கற்கள் புரளுதல் மற்றும் மண்சரிவுகள் ஏற்படுதல் போன்ற சேதங்கள் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி தீ வைப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) வெப்பமான காலநிலையுடன் வேகமாகப் பரவும் தீயை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உணர்திறன் வாய்ந்த சூழல் தொகுதியைப் பாதுகாப்பதற்காக நிரந்தரமான தீர்வு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

43/2024

கௌரவ புத்திக பத்திரண,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிங்ஹராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்தைச் சுற்றி அமைந்துள்ள 13 ஒதுக்குக் காடுகளை சிங்ஹராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்திற்குள் உள்ளடக்கி அந்த வன ஒதுக்கத்தின் விஸ்தீரணத்தை 30,000 ஹெக்டெயர் வரை அதிகரிப்பதற்கான வர்த்தமானப் பத்திரிகையில் முன்னாள் சனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2019 ஆம் ஆண்டில் ஒப்பமிட்டுள்ளார் என்பதையும்;

(ii) ஆயினும், இவ்வர்த்தமானப் பத்திரிகை இதுவரை பிரகடனப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைவாக, சிங்ஹராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்துக்குள் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு ஒதுக்குக் காடும் அவற்றின் நில விஸ்தீரணம் ஏக்கர்களிலும் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்படுவது தாமதமடைவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையை பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1126/2024

கௌரவ டீ. வீரசிங்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆட்களுக்கு உரித்தாகும் ஓய்வூதியமானது, பங்களிப்பு ஓய்வூதியம் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களின் பேரில் உரித்தாகும் ஓய்வூதியம் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படுமென நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், எதிர்காலத்தில் மேற்படி அரச ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரித்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1146/2024

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை காபட் இடும் கருத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் காபட் இட்டு பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் யாதென்பதையும்;

(ii) அவ்வீதிகள் யாவையென்பதையும்;

(iii) இதுவரை பணிகள் பூர்த்தி செய்யப்படாத வீதிகளின் நீளம் யாதென்பதையும்;

(iv) அவ்வீதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி-எம்பிலிபிட்டிய வீதியின் பெல்மடுல்ல தொடக்கம் பல்லேபெத்த வரையிலான பகுதி சேதமடைதுள்ளது என்பதையும்;

(ii) மேற்குறித்த வீதிப் பகுதியை மீண்டும் காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் பணிகள் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது அதன் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி வீதிப் பகுதியை காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1152/2024

கௌரவ (சட்டத்தரணி) மதுர விதானகே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா கருத்திட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா;

(ii) இதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(iii) மேற்படி கருத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்படும் திகதி யாது;

(iv) மேற்படி கருத்திட்டத்தினால் உள்வாங்கப்படும் பிரதேசங்கள் யாவை;

(v) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் பயிரிடப்படும் வயற் காணிகளின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1248/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு அமைவாகத் தனியார் துறை ஊழியர்களின் வேதனங்களை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

(ii) அவ்வாறான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாமல் இருந்தால் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் போது பெண் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகளையும்;

(ii) தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுக்குமுகமாகப் பெண்கள் தொழிற்படையில் இணைவதற்கான எத்தனிப்புக் காணப்படுவதால், பிள்ளைப் பராமரிப்பு, போஷாக்கு மற்றும் அவை போன்ற உதவியினைப் பெண் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iii) கடல் கடந்த நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாகத் தொழில்புரியும் பெண் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iv) அவ்வாறான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாமல் இருந்தால் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1252/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகத்திலுள்ள பெரும்பாலான நாடுகளால் இன்றளவில், தனியார் மருத்துவக் கல்வி ஊக்குவிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் மேற்கத்திய மருத்துவக் கல்வியை வழங்கும் தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அந்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தேவையான மருத்துவ பயிற்சியைப் பெறுவதற்காக உள்ள அரசாங்க போதனா வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) இலங்கையில் தனியார் மேற்கத்திய மருத்துவ கல்வியை விருத்தி செய்யவும் ஊக்குவிக்கவும் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1281/2024

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மொனறாகலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி கருத்திட்டங்களில் தற்போது பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) இன்றளவில் பணிகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(v) மேற்படி கருத்திட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(vi) அவற்றின் பணிகளை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

1283/2024

கௌரவ அசங்க நவரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் அரசாங்க வைத்தியசாலைகளில் இன்றளவில் காணப்படும் மனித வள மற்றும் பௌதீக வள குறைபாடுகள் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதையும் ;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் பொருட்டு இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1286/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தினதும் வருடாந்த வருமானம் மற்றும் செலவினம் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மத்தியில் நிதி மற்றும் பௌதீக வளங்கள் குறைந்த உள்ளூராட்சி நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2024 மார்ச் 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

311/2024

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இரத்தினபுரி, குருவிட்ட, போபத் எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணத்தை அறவிடும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அதனூடாக மேற்படி நிறுவனம் ஈட்டும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வருமானத்தைப் பயன்படுத்தி நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சிறுவர்களிடமிருந்து அறவிடப்படும் பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

357/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இன்றளவில் இலங்கையின் நீதிவான் நீதிமன்றங்களிலும் மேல் நீதிமன்றங்களிலும் விசாரிக்கப்பட்டு வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடைய வழக்குகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையானது, வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 2, 4, 6, 8 மற்றும் 10 வருடங்கள் எனும் கால வகைப்படுத்தலின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கமைவாக எத்தனையென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்படாத போதிலும் இலங்கைப் பொலீசாருக்கு அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குச் செய்யப்பட்டுள்ள சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கமைவாக எத்தனையென்பதையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் காரணமாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்-பெண் பாலின அடிப்படையில் எத்தனையென்பதையும்;

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பொலிசாருக்கு அல்லது அதிகாரசபைக்கு அறிக்கையிடப்படாத சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தரவுகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் எத்தனையென்பதையும்;

(iii) கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் படிப்படியாக அதிகரித்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான நீதி நிர்வாக தாமதங்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

367/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான வைத்தியசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைகளில் உள்ள கட்டில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள அவசர சிகிச்சைப் பிரிவுகளில் காணப்படும் கட்டில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் உள்ள பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையில் உள்ள ஆண் மற்றும் பெண் தாதிமார்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதிமார் தவிர்ந்த ஏனைய பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கு ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நாட்டில் இன்றளவில் காணப்படுகின்ற வைத்தியர்-நோயாளர்களின் விகிதமும் நோயாளர் - கட்டில்களின் விகிதமும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

372/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலின் பின் இலங்கைக்குள் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்ட இடம், வெடிபொருள் வகை, அளவு, அச்சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்ட நபர்களின் பெயர்கள், அவர்களின் வதிவிடங்கள் மற்றும் குறித்த விசாரணைகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி கைது நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய பாதுகாப்புப் பேரவை விழிப்பூட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு விழிப்பூட்டப்பட்டுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

379/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களை (ஹெஜின் உடன்படிக்கைகளை) நாடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கூட்டுத்தாபனத்தினால் எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட நிதி நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களினால் பெறப்பட்ட இலாபம்/நட்டம் ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கொடுக்கல் வாங்கல்களின்போது கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அலுவலர்கள்/நபர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக ஏற்பட்ட நட்டங்கள், தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தின் மீது தாக்கம் செலுத்தியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தாக்கத்தினைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்திலும் இத்தகைய நட்டங்கள் ஏற்படக்கூடிய எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

466/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்தில், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினாலும் கழிவுகள் அகற்றப்படுகின்ற இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) தற்போது மேல் மாகாணத்தில் பாரியளவில் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடங்களை அண்டியதாக வாழும் மக்களுக்கு பல்வேறு சுற்றாடல்சார் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

511/2024

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில், மதவாச்சி வர்த்தக அங்காடியின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தக அங்காடியை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி வர்த்தக அங்காடியை துரிதமாக திறந்து வைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

541/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாசனை சரக்கு மற்றும் அதுசார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தல் சபையினால் நிறுவப்பட்டுள்ள விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் புதிய விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், புதிய விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(v) சபையின் தற்போதைய வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

564/2024

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நடுவதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) அவை வழங்கப்பட்ட பிரசேதங்கள் மற்றும் கன்றுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி தென்னங் கன்றுகள் உரியவாறு வளர்ச்சியடைகின்றனவா என பின்னாய்வு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி தென்னங் கன்றுகளுக்கு மத்தியில் சரியாக வளர்ந்து வரும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) எதிர்வரும் ஆண்டில் விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1243/2024

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி காணிகளில் தற்போது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்படும் காணிகளின் அளவானது ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கமைவாக தனித்தனியாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு இன்றளவில் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், 2021 ஆம் ஆண்டு முதல் இதுவரை குடியிருப்பாளர்களுக்கும் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள காணி உறுதிகளின் எண்ணிக்கை மற்றும் அக்காணிகளின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப தனித்தனியாக யாது;

(iii) காணி உறுதிகள் வழங்கப்படாதுள்ள காணிகளுக்கு எதிர்காலத்தில் உறுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?